AGLASEM.COM

Tamilnadu Board

Quarterly Exam Question Paper

CLASS 11



காலாண்டுத் தேர்வு – 2022

11 - ஆம் வகுப்பு

வரலாறு

நேரம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 90

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **20 X 1 = 10**

1. எழுத்துகள் அறிமுகமாவதற்கு முந்தைய காலகட்டம் ..... எனப்படுகிறது.
அ) வரலாற்றுக்கு முந்தைய காலம் ஆ) வரலாற்றுக்காலம்
இ) பழங் கற்காலம் ஈ) புதிய கற்காலம்

2. ஹரப்பா மக்களுக்கு முக்கியமான வாழ்வாதார வழிமுறையாக .....இருந்தது.
அ) வேளாண்மை ஆ) மட்பாண்டம் செய்தல்
இ) கைவினைத்தொழில்கள் ஈ) மீன் பிடித்தல்

3. ஆதிச்சநல்லூர் ..... மாவட்டத்தில் அமைந்துள்ளது .
அ) கோயம்பத்தூர் ஆ) திருநெல்வேலி இ) தூத்துக்குடி ஈ) வேலூர்

4. கீழ்க்காணும் இணைகளை கவனிக்கவும் .
i) சேனானி - படைத்தளபதி ii) கிராமணி - கிராமத்தலைவர்
iii) பலி-தன்னார்வத்தால் கொடுக்கப்பட்டது iv) புரோகிதர் - ஆளுநர்
மேற்கண்டவற்றில் எந்த இணை தவறானது ? அ) i ஆ) ii இ) iii ஈ) iv

5. ..... வேளாண்மை முறையை மேம்படுத்தியதில் முக்கியப் பங்காற்றியது.
அ) இரும்பு ஆ) வெண்கலம் இ) செம்பு ஈ) பித்தளை

6. வடஇந்தியாவில் 16 மகாஜனபதங்களில் வலிமை படைத்ததாக வளர்ந்த அரசு .....ஆகும். அ) கோசலம் ஆ) அவந்தி இ) மகதம் ஈ) குரு

7. அசோகரது தூண்களில் உள்ள பிராமி எழுத்துகளுக்கு பொருள் கண்டுபிடித்தவர் .....
அ) தாமஸ் சாண்டர்ஸ் ஆ) ஜேம்ஸ் பிரின்செப்
இ) சர் ஜான் மார்ஷல் ஈ) வில்லியம் ஜோன்ஸ்

8. கீழ்க்கண்டவற்றில் எந்த இணை தவறானது? i) தலையாலங்கானம் - நெடுஞ்செழியன்
ii) பட்டினப்பாலை - உருத்திரங்கண்ணனார் iii) கஜபாகு - இலங்கை
iv) திருவஞ்சிக்களம் - சோழர் அ) i ஆ) ii இ) iii ஈ) iv

9. இக்ஷ்வாகுகள் ..... பகுதியில் வலிமை பெற்றிருந்தனர் .
அ) ஆந்திரா – கர்நாடகா ஆ) ஒடிசா இ) தக்காணப் பகுதி ஈ) பனவாசி

10. அலெக்ஸாண்டரின் திறன்மிக்க தளபதிகளுள் ஒருவர் .....
அ) செலியுகஸ் நிகேடர் ஆ) அன்டிகோனஸ் இ) அண்டியோகஸ் ஈ) டெமெட்ரியஸ்

11. குஷாண நாணயங்கள் ..... நாணயங்களைவிட உயர்ந்த தரத்தில் இருந்தன.
அ) ரோமானிய ஆ) கிரேக்க இ) குப்த ஈ) சாதவாகன

12. குப்தர் காலம் குறித்த கீழ்க்கண்ட சான்றுகளில் எது நம்ப முடியாதது என்று நீங்கள் கருதுகிறீர்கள்? அ) இலக்கியச் சான்றுகள் ஆ) கல்வெட்டு சான்றுகள்
இ) நாணயச் சான்றுகள் ஈ) கதைகள், புராணங்கள் .

13. ..... என்ற சீனப் பயணி பொ. ஆ 5 ஆம் நூற்றாண்டின் இந்திய சமூகத்தைக் குறித்து விரிவாக எழுதியுள்ளார்.
அ) இட்சிங் ஆ) யுவான் - சுவாங் இ) பாஹியான் ஈ) வாங் - யுவான்-சீ

14. கீழ்க்கண்டவற்றுள் ஹர்ஷரால் எழுதப்பட்ட நூல் எது ?
அ) ஹர்ஷசரிதம் ஆ) பிரியதர்சிகா இ) அர்த்தசாஸ்திரா ஈ) விக்ரம ஊர்வசியம்

15. கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது?
அ) தர்மபாலர் சோமபுரியில் பெரியதொரு பௌத்த விகாரையைக் கட்டினார்
ஆ) இராமபாலர் இராமசரிதத்தை எழுதினார்.
இ) மகிபாலர் கீதங்கள் வங்காளத்தின் கிராமப்பகுதிகளில் இப்போதும் பாடப்படுகின்றன
ஈ) கௌடபாடர் ஆகம சாத்திரத்தை இயற்றினார்.

16. **தேர்ந்தெடுத்துப் பொருத்துக.**
i) சிம்ம விஷ்ணு - 1. சாளுக்கிய அரசன்
ii) முதலாம் ஜெயசிம்மன் - 2. பல்லவ அரசன்
iii) முதலாம் ஆதித்தன் - 3. கப்பல் தளம்
iv) மாமல்லபுரம் - 4. சோழ அரசன் அ) 4,3,1,2 ஆ) 4,1,2,3 இ) 2,1,4,3 ஈ) 4,3,2,1

schools.aglasem.com
aglasem.com

17. காம்போஜம் என்பது நவீன .....
அ) அஸ்ஸாம் ஆ) சுமத்ரா இ) ஆனம் ஈ) கம்போடியா

18. கஜினி மாமுது , இந்தியாவுக்குள் ... முறை இராணுவத் தாக்குதல்கள் நடத்தினார்.
அ) 15 ஆ) 17 இ) 18 ஈ) 19

19. ..... படுகையில் இருந்த சோழ அரசின் மையப்பகுதி சோழ மண்டலம் எனப்படுகிறது .
அ) வைகை ஆ) காவிரி இ) கிருஷ்ணா ஈ) கோதாவரி

20. ..... பாண்டியர்களின் முதல் தலைநகரமாகும் .
அ) மதுரை ஆ) காயல்பட்டினம் இ) கொற்கை ஈ) புகார்

குறிப்பு : ஏதேனும் ஏழு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்.
வினா எண் 30 – க்கு கண்டிப்பாக விடையளிக்கவும். 7 X 2 = 14

21. பழங்கற்காலம் எவ்வாறு பிரிக்கப்படுகிறது?
22. மகாவீரருடைய போதனைகளின் மையக்கருத்து என்ன?
23. எதன் காரணமாக மகா அலெக்சாண்டர் போரஸின் அரியணையைத் திருப்பித் தந்தார்?
24. பண்டமாற்று முறையை விளக்குக .
25. **பின்வருவன குறித்து ஒரு பட்டியலைத் தயாரிக்கவும் .**
அ) இந்தியாவிலிருந்து ரோமுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள்.
ஆ) ரோமிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் .
26. அலகாபாத் தூண் கல்வெட்டுக் குறித்து கூறுக.
27. ஹர்ஷப் பேரரசு குறித்து அறிய உதவும் கல்வெட்டுச் சான்றுகள் யாவை ?
28. அனைவரையும் உள்ளடக்கிய மதமாக வைணவத்தை மாற்றிய ராமானுஜரின் பங்களிப்பைக் குறிப்பிடுக.
29. துருக்கியப் படையெடுப்பின்போது வடஇந்தியாவில் ஆட்சியிலிருந்த ராஜபுத்திர வம்சாவளிகள் யாவர்?
30. சம்புவராயர்கள் பற்றி குறிப்பு வரைக.

குறிப்பு : ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7 X 3 = 21
வினா எண் 40 – க்கு கண்டிப்பாக விடையளிக்கவும் .

31. அச்சூலியன் , சோஹானியப் பண்பாடுகளின் கருவிச் செயல்பாடுகள் குறித்து எழுதுக.
32. காட்டைத் திருத்தியதில் இரும்பின் பங்களிப்பு குறித்து மதிப்பிடுக .
33. அசோகர் கலிங்கம் மீது படையெடுத்தது பற்றி நீவிர் அறிவது என்ன ?
34. சங்க காலத்தில் தமிழ் நிலத்தின் ஐந்து திணைகள் எழுதுக.
35. "முற்பட்ட கால ரோமானிய நாணயங்கள் கோயம்பத்தூர் , ஈரோடு , சேலம் , கரூர் மாவட்டங்களில் அதிகம் கிடைக்கின்றன" ஏன் ?
36. குப்தப் பேரரசின் நிர்வாகப் பிரிவுகளைக் கூறுக .
37. எல்லோரா மற்றும் எலி.பாண்டாவின் நினைவுச் சின்னங்கள் விவரி.
38. பல்லவர்களின் நிர்வாகப் பிரிவுகள் எழுதுக.
39. மாலிக்கா.பூரின் தென்னிந்தியத் தாக்குதல்கள் குறித்து எழுதுக .
40. பாண்டியர் கால குதிரை வணிகம் குறித்து கூறுக.

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 X 5 = 35

41. அ) வரலாற்றுக்கு முந்தைய இந்தியா குறித்து விளக்குக. ***(அல்லது)***
ஆ) திட்டமிடப்பட்ட நகரங்களான ஹரப்பா , மொகஞ்சதாரோ பற்றி எழுதுக
42. அ) வேதகால அரசியல் மற்றும் நிர்வாகம் குறித்து ஒரு கட்டுரை வரைக. ***(அல்லது)***
43. அ) மௌரியப் பேரரசு பற்றி நாம் அறிய உதவும் சான்றுகளைப் பற்றி விளக்கவும். ***(அல்லது)*** ஆ) களப்பிரார் என்போர் யார் ? அவர்கள் குறித்து பூலாங்குறிச்சிக் கல்வெட்டிலிருந்து அறிந்து கொள்வதென்ன ?
44. அ) மத்தியத் தரைக் கடல் உலகின் பெருஞ்சக்தியாக ரோமானிய அரசு மேலெழுந்த விதத்தை விவரி. ***(அல்லது)***
ஆ) புதிய கற்கால பண்பாடு காலத்தில் அகழாய்வு செய்யப்பட்ட கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும். ***(அல்லது)***
1) மெஹர்கர் 2) பர்சாஹோம் 3) பையம்பள்ளி 4) மஸ்கி 5) குச்சா
45. அ) " குப்தர் காலம் பண்டைய இந்தியாவின் பொற்காலம் " விவாதிக்கவும். ***(அல்லது)***
ஆ) ஸ்ரீகுப்தர் முதல் ஸ்கந்தகுப்தர் வரையிலான குப்த அரசர்களை வைத்து காலக்கோடு வரைக .
46. அ) ஹர்ஷரின் வடஇந்தியப் படையெடுப்புகள் குறித்து விவரி. ***(அல்லது)***
ஆ) மாமல்லபுரம் கடற்கரைக் கோவில்களின் கட்டடக்கலை மேன்மைகளை விளக்குக.
47. அ) இந்திய வரலாற்றில் இரண்டாம் தரெய்ன் போர் திருப்புமுனையாக அமைந்தது எவ்வாறு? ***(அல்லது)*** ஆ) சோழர் காலக் கட்டுமானக் கலையின் சிறப்புகளை எழுதுக .

schools.aglasem.com
AglaSem Earn while Learn Program. Send your papers and get paid.
Contact: support@aglasem.com
aglasem.com